# குடியேற்றம் மற்றும் குடியுரிமைக்கான அமைச்சர் பிரதம மந்திரி

**ஆஸ்திரேலியாவும் மலேசியாவும் இடமாற்ற ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன**

மக்களைக் கடத்தும் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கும் கூடுதலாக 4000 உண்மையான அகதிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்குமான தொடக்க ஏற்பாடு ஒன்றைச் செய்வதற்காக ஆஸ்திரேலியா மற்றும் மலேசிய அரசுகள் இன்று கையொப்பமிட்டுள்ளன.

மக்களைக் கடத்துபவர்களின் தொழிலை சீர்குலைத்து, அவர்கள் மனித அவலங்களைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி இலாபம் சம்பாதிப்பதை தடுப்பதற்கும், மக்கள் தங்களுடைய உயிரைக் கடலில் பணயம் வைப்பதை நிறுத்துவதற்குமான, ஆஸ்திரேலியா மற்றும் மலேசியாவின் உள்ளஉறுதியை இந்த ஏற்பாடு நிருபிக்கிறது.

கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற ஒரு அரசுமுறை விழாவில் குடியேற்றம் மற்றும் குடியுரிமைக்கான அமைச்சர், கிரிஸ் போவென் MP அவர்களும் மலேசிய உள்துறை அமைச்சர், டத்தோ' செரி ஹிஷாமுதின் பின் டுன் ஹுசைன் அவர்களும் இந்த ஏற்பாட்டுக்கான ஆவணங்களில் கையொப்பமிட்டனர்.

கடல்வழியாக விதிமுறைகளுக்கு மாறாக வந்திறங்குகின்ற 800 வரையிலான நபர்களை ஆஸ்திரேலியாவிலிருந்து மலேசியாவிற்கு இடமாற்றம் செய்வதற்கும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு வருடமும் மலேசியாவிலிருந்து கூடுதலாக 1000 உண்மையான அகதிகளை ஏற்றுக் கொள்வதற்கான ஆஸ்திரேலியாவின் பொறுப்புறுதியை உறுதிசெய்வதற்கும் இந்த ஏற்பாடு வழிவகை செய்கிறது. இது ஆஸ்திரேலியாவின் ஒட்டுமொத்த வருடாந்திர மனிதநேயமிக்க உட்கொள் அளவை 14750 இடங்களுக்கு அதிகரிக்கின்றது.

இது நீடித்து நிலைக்கின்ற மற்றும் வலிமையான கூட்டுறவைக் கொண்டிருக்கின்ற இரண்டு நாடுகளுக்கு இடையேயான ஒரு துணிச்சலான மற்றும் புதுமையான ஏற்பாடாகும்.

இன்றைய தினத்திற்குப் பிறகு, ஆஸ்திரேலியாவிற்கு படகு மூலம் வந்திறங்குகின்ற 800 பேருடைய கோரல்கள் ஆஸ்திரேலியாவில் செயல்முறைப்படுத்தப்பட மாட்டாது. அதற்கு பதிலாக அவர்கள் மலேசியாவிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு தங்களுடைய கோரல்கள் மதிப்பீடு செய்வதற்காக காத்திருக்கும் புகலிடம் கோரும் 90000 க்கும் மேற்பட்ட மற்ற மக்களுடன் காத்திருக்க வேண்டியிருக்கும்.

அதேநேரத்தில், மறுகுடியேற்றத்திற்கு மிகவும் அவசியம் இருப்பவர்களாக UNHCR-ஆல் கருதப்படும் கூடுதல் 4000 பேர்களுக்கு ஆஸ்திரேலியாவில் தங்களுடைய புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

இடமாற்றம் செய்யப்படும் நபர்கள் மனித உரிமைகள் தரநிலைகளுக்கு இணங்க கண்ணியத்துடனும் மரியாதையுடன் நடத்தப்படுவார்கள், அகதி மரபொழுங்கின் முக்கிய ஒழுக்க நெறியான, அகதிகளை சொந்த நாட்டிடம் ஒப்படைக்காமைக் கொள்கையை மதித்து நடப்போம் மற்றும் புகலிடக் கோரிக்கைகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையரால் (UNHCR) கருத்தில் கொள்ளப்படும் என்ற மலேசியாவின் பொறுப்புறுதியை இந்த ஏற்பாடு மீண்டும் வலியுறுத்துகின்றது.

மேலும் ஆஸ்திரேலியா மற்று மலேசியாவிற்கு இடையேயான இந்த இடமாற்ற ஏற்பாடு கீழ்க்கண்டவற்றை அளிக்கின்றது:

- அடிப்படை உயிர் அளவியல் பரிசோதனையுடன் சேர்த்து, இடமாற்றம் செய்யப்படுவதற்கான உடற்தகுதி மற்றும் தகுதிப் பொருத்தத்தை உறுதி செய்வதற்கு வந்திறங்குபவர்கள், இடமாற்றம் செய்யப்படுவதற்கு முன்பு மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்;

- இடமாற்றம் செய்யப்படுபவர்கள் மலேசியாவில் சட்டதிட்டத்திற்குட்பட்டு இருப்பார்கள் மற்றும் மலேசியக் குடியேற்றச் சட்டம் மற்றும் கடவுச்சீட்டுகள் சட்டத்தின் கீழ் விலக்களிப்பு வழங்கப்படுவார்கள்;
- இடமாற்றம் செய்யப்படுபவர்கள் தொடக்கத்தில் 45 நாட்கள் வரையில் UNHCR மற்றும் குடியேற்றத்திற்கான சர்வதேச அமைப்பின் ஆதரவுடன் மலேசியாவிலுள்ள ஒரு இடமாற்ற மையத்தில் தங்க வைக்கப்படுவார்கள்;
- தொடக்கச் செயல்முறையைத் தொடர்ந்து, பணி உரிமைகள், கல்வி மற்றும் உடல்நலப் பராமரிப்புக்கான அணுக்கத்துடன் இடமாற்றம் செய்யப்படுபவர்கள் சமுதாயத்தில் ஒன்றுகலக்கப் படுவார்கள்.
- மலேசியாவிலுள்ள மற்ற புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு முன்னதாக இடமாற்றம் செய்யப்படுபவற்களுடைய கோரல்களையோ அல்லது மீள்குடியமர்வுக்கான ஏற்பாடுகளையோ செயல்படுத்துவதற்கு எந்த விதமான முன்னுரிமைகளையும் கிடையாது.

இடமாற்ற ஏற்பாடு குறித்து UNHCR உடன் நெருக்கமாக கலந்தாலோசிக்கப்படுகிறது. மற்றும் UNHCR மற்றும் IOM இரண்டும் இவற்றைச் செயல்முறைப்படுத்துதில் முக்கியப் பங்காற்றும்.

ஏற்பாட்டுக்கான அன்றாட மேலாண்மை மற்றும் இடமாற்றம் செய்யப்படுவர்களின் தொடர்ச்சியான பொதுநலம் குறித்த தொடர்ந்த ஆலோசனையை இரண்டு அரசுகளுக்கும், ஆஸ்திரேலியா, மலேசியா, UNHCR, IOM மற்றும் பிறவற்றிலிருக்கும் பிரதிநிதிகள் உள்ளிட்ட கண்காணிப்பு மற்றும் ஆலோசனைக் குழுக்கள் வழங்கிடும்.

இன்று கையொப்பமிடப்பட்டுள்ள ஏற்பாட்டின் கீழ், 25 ஜூலைக்கு முன்னர் ஆஸ்திரேலியாவிற்கு வந்திறந்தியவர்கள் மலேசியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள். இதன் விளைவாக, இன்றையை அறிவிப்புக்கு முன்னர் வந்திறங்கிய, தற்சமயம் கிருஸ்துமஸ் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்கள், இப்போது ஆஸ்திரேலியாவில் செயல்முறைப் படுத்தப்படுவார்கள்.

பாலி செயல்முறையிலுள்ள ஒரு முக்கிய பிராந்தியக் கூட்டாளி மலேசியாவாகும் மற்றும் இந்த வருடம் மார்ச் மாதத்தில் நடைபெற்ற பாலி செயல்முறை அமைச்சுரீதியான கருத்தரங்கில் பிராந்தியக் கூட்டுறவுக் கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் உள்ள ஒரு குறிப்பிடத்தகுந்த நடவடிக்கையை இந்த ஏற்பாடு பிரதிநிதித்துவப் படுத்துகிறது.

இது பிராந்தியக் கூட்டுறவுக் கட்டமைப்பை கீழ்ச்செருகுகின்ற கூட்டு பொறுப்பு மற்றும் கூட்டுறவுக் கொள்கைகளுடன் இணங்கிய ஒரு உண்மையான பாரம்-பகிர்வு ஏற்பாடாகும்.

ஆஸ்திரேலியா-மலேசியா இடமாற்ற ஏற்பாட்டு ஆவணங்கள் இங்கு கிடைக்கப் பெறுகின்றன:

ஏற்பாடு - http://www.minister.immi.gov.au/media/media-releases/_pdf/20110725-arrangement-malaysia-aust.pdf

இயக்கமுறை வழிகாட்டுதல்கள் - http://www.immi.gov.au/managing-australias-borders/border-security/_pdf/operational-guidelines-transfers-resettlement.pdf

**கேன்பெர்ரா**
**25 ஜூலை 2011**

**பத்திரிக்கை அலுவலகம் PRESS OFFICE (02) 6277 7744**
**அமைச்சர் போவென் அவர்களின் அலுவலகம் (02) 9251 8912**